05.03.2026.

OS.51/2021

PW1- சுப்பிரமணியன் – த/பெ.மேகலிங்கம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.03.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 பற்றிய விவரங்களை ஏற்கனவே நான் இந்த வழக்கிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.8 ஆவணமானது அபாயகரமான தொழில் செய்வதாக குறிப்பிட்டு வழங்கப்பட்ட உரிமைச் சான்று என்றால் அது பற்றிய விவரம் எனக்குத் தெரியாது.

3. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் வா.சா.ஆ.8 ஆவணமானது அபாயகரமான மற்றும் விபத்து ஏற்படுத்தக்கூடிய பொருட்களை வைத்து தொழில் செய்யக்கூடிய உரிமை சான்று என்றும் அது வழக்கிற்கு எதிராக இருப்பதால் நான் தவறாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான் வாடகைக்கு இருக்கும் கடையானது கோவில் வெளிப்புறத்தில் உள்ள மெயின் தெருவில் பொதுமக்கள் அதிகம் புழங்கக்கூடிய பகுதி என்பதால் அபாயகரமான பொருட்களை வைத்து தொழில் செய்வதற்கு தீயணைப்புத் துறையில் இருந்து தடையில்லா சான்று வேண்டும் எனவும் அவ்வாறு சான்று இல்லாததால் நான் செய்யும் தொழில் சட்டப்படி தவறானவை என்றும் அதன் அடிப்படையிலேயே நான்

தபசில் சொத்தை காலி செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாவேன் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.8 ல் தென்காசி நகராட்சி வழங்கிய ரசீதில் பின்பக்கம் பின்கோடு 627759 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தென்காசியில் பின்கோடு 627811 என்பதால் வா.சா.ஆ.8 ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 என் வழக்கு கட்சியை நிரூபணம் செய்வதற்கு உதவாது என்றும் வா.சா.ஆ.8 என் வழக்கிற்கு எதிராக இருப்பதால் என் பிராது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC)
தென்காசி